# கல்விக்கும் வாழ்க்கைக்கும் உகந்த சூழல்




**பேரண்ட்சர்க்கிள் குழு**

**கல்வி, சுற்றுச்சூழலுக்கு சிறந்த பங்காற்றியமைகாக ராம்கோ குழுமம், *ET Now* தொலைக்காட்சியின் இரு பெருமைமிகு விருதுகளைப் பெற்றிருக்கிறது.**

வெறும் வாய் வார்த்தைகளை மட்டும் வைத்துக்கொண்டு வாழ்க்கைக்கான மதிப்பீடுகளைச் செதுக்கிவிட முடியாது என்பது என் தந்தையாரின் கண்ணோட்டம் ஆகும். நான் கடின உழைப்பு, அனுபவம் ஆகியவற்றின்மூலமே அதனை நான் செய்ய முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார்.



தெய்வத்திரு.ராமசுப்ரமணிய ராஜா, முன்னாள் தலைவர், ராம்கோ குழுமம். ஒரு பெருந்தலைவரின் தொலைநோக்கு சிந்தனைகளைப் படிப்பது எப்போதும் அற்புதமான அனுபவம்தான் இல்லையா! ராம்கோ குழுமத்தை வெற்றிப்பாதையில் வழிநடத்தும் பொன்னெழுத்துக்கள் அவை. ஆண்டாண்டு காலமாக ராம்கோ குழுமம், பல்வேறு சமூக சேவை சார்ந்த செயல் பாடுகளில் ஈடுபட்டுவருகிறது. இவை, சமூகத்தின் பல மட்டங்களிலும் (குறிப்பாக கல்வி, வாழ்க்கைத்தரம், சுற்றுச்சூழல் ஆகியவற்றில்) நேர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கின்றன.

**பள்ளிக்குழந்தைகளின் வாழ்வில் இவை நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பது மனநிறைவளிக்கிறது என்கிறார் ராம்கோ குழுமத்தின் தலைவர் திரு.வெங்கட்ராம ராஜா மகிழ்ச்சியுடன்.**

தமிழகத்தின் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அரசுப்பள்ளி ஒன்றில் ராம்கோ குழுமம் அண்மையில் மேற்கொண்ட ஒரு முயற்சி, நல்லதொரு மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கிறது. கோவிந்தாபுரத்தில் உள்ள அந்த மேல்நிலைப்பள்ளி, ராம்கோ குழுமத்தின் ஆதரவுடன் 5 எஸ் தரச்சான்று பெற்ற முதல் அரசுப்பள்ளியாக இன்று உருவெடுத்திருக்கிறது. இக்குழுமத்தால் நிர்வகிக்கப்படும் வித்யா மந்திர் பள்ளியும் இச்சான்றிதழ் பெற்றுள்ளது. பிரித்தல், நேர்படுத்துதல், மிளிர்தல், தரப்படுத்தல், நீடித்த வளர்ச்சி ஆகியவற்றை (Sort, Straighten, Shine, Standardise and Sustain) உறுதிப்படுத்தியமைக்காக இச்சான்று வழங்கப்பட்டுள்ளது. கற்றலுக்கு உகந்த சூழலை உறுதிப்படுத்தும் பணிச்சூழலை உறுதிப்படுத்தியமையே இதற்குக் காரணம். இவற்றைக் கற்றுக்கொண்ட பிள்ளைகள் தங்களது அன்றாடத்தை மட்டுமல்ல, பிற்கால வாழ்க்கையையும் சீராக ஒழுங்கமைத்துக்கொள்வர்.

இதன்படி கே.ஜி. வகுப்புப் பிள்ளைகள் தங்களது மதிய உணவுப் பாத்திரங்களை அவற்றில் உள்ள எண்களைக்கொண்டு அடையாளம் காணுவர். 5 எஸ் முறை மூலம் பிள்ளைகளின் ஒழுக்கம், கற்றல் தொடர்பான மனோபாவம் ஆகியவற்றிலும் கடந்த 4–5 ஆண்டுகளில் நல்ல விளைவுகள் ஏற்பட்டுள்ளன. 62% தேர்ச்சி, 95% ஆகியிருக்கிறது. அடுத்த ஒன்றிரண்டு ஆண்டுகளில் இது 100% ஆக மாறும். இம்முறை, பிள்ளைகளை எம் பள்ளியின் சொத்துக்களாக ஆக்கியிருக்கிறது என்கிறார் வித்யா மந்திர் பள்ளியின் முதல்வர் எம்.ர்மிளா.

கழிப்பறை வசதியின்மையால் மாணவியரின் இடைநிற்றல் வீதம் கணிசமாக இருந்தது. தற்போது ராம்கோ சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் உதவியுடன் கழிப்பறைகள் கட்டப்பட்ட பிறகு மாணவியரின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. பாதுகாப்பு, தன்னம்பிக்கையுடன் அவர்கள் கல்வி கற்கின்றனர். அடிமட்ட அளவில் கல்வி முறையில் புரட்சிகரமான மாற்றத்தை இக்குழுமம் கொண்டு வந்திருக்கிறது.

ராம்கோ குழுமத்தின் சமூக சேவைகளைப் பாராட்டி இ.டி நவ் தொலைக்காட்சி நிறுவன சமூகப் பொறுப்பில் புதுமை படைத்தல்; சிறந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சி ஆகிய தலைப்புகளில் விருதுகளை வழங்கியிருக்கிறது. பள்ளிக்குழந்தைகளின் வாழ்வில் இவை நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பது மனநிறைவளிக்கிறது என்கிறார் ராம்கோ குழுமத்தின் தலைவர் திரு.வெங்கட்ராம ராஜா மகிழ்ச்சியுடன்.

கடந்த 60 ஆண்டுகளாக ராம்கோ குழுமம், பல்வேறு அறக்கட்டளைகள் மூலம் பல கல்வி நிறுவனங்கள் (பாலர் பள்ளிகள் முதல் பொறியியற்கல்லூரிகள்வரை), பழகுடியினர் விடுதிகளை உருவாக்கி நடத்துவதுடன் அரசு மருத்துவமனைகளைத்தரம் உயர்த்தும் பணிகளையும், ஏழை எளியோருக்கு மருத்துவ சேவை வழங்குதலையும் செய்து வருகிறது.